சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2018–19–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்– "நூலக ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்" – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.147 நாள் 19.07.2018

திருவள்ளுவராண்டு, 2049
விளம்பி வருடம், ஆடி–3

படிக்கப்பட்டவை:–

பொது நூலக இயக்குநரின் கடித ந.க எண்.5768/உ3/2018, நாள் 11.06.2018 மற்றும் 27.06.2018.

~*~~*~

ஆணை:–

2018–19–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"மாறிவரும் தொழில் நுட்பங்களுக்கேற்ப வாசகர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் நூலகர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளித்து அதன் மூலம் நூலகங்களை மேம்படுத்துதல், பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் போன்றவைகளை நடத்துவதற்காக சென்னையில் நூலக ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டத்திற்கு ரூ.10 இலட்சம் செலவிடப்படும்.

2. பொது நூலக இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்திட, மாறிவரும் தொழில் நுட்பங்களுக்கேற்ப வாசகர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நூலக ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளவும், இதன் பொருட்டு தேவைப்படும் உபகரணங்களை எல்காட் நிறுவனத்திடமிருந்து ரூ.1,69,878/– (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்து எட்டு மட்டும்) மதிப்பில் வாங்கி வழங்கவும் மற்றும் இதர மென்பொருட்கள் எல்காட் நிறுவனத்தால் வழங்க இயலாத நிலையில் குறைந்த விலைப்புள்ளி வழங்கும் நிறுவனத்தின் மூலம் வாங்கவும், மேலும் நூலகர்களுக்கான பயிற்சி பட்டறைகள், கருத்தரங்குகள் போன்றவற்றிற்கான செலவினங்களை அவ்வப்பொழுது தேவைக்கேற்ப சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ள அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

3. பொது நூலக இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, 2018–19ஆம் ஆண்டின் அறிவிப்பான "நூலக ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்" என்ற அறிவிப்பினை செயல்படுத்திட, மாறிவரும் தொழில் நுட்பங்களுக்கேற்ப வாசகர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில், அண்ணா

(த.பி.பா.)

நூற்றாண்டு நூலகத்தில் நூலக ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளவும், இதன் பொருட்டு தேவைப்படும் உபகரணங்களை எல்காட் நிறுவனத்திடமிருந்து ரூ.1,69,878/– (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்து எட்டு மட்டும்) மதிப்பில் வாங்கி வழங்கவும் மற்றும் இதர மென்பொருட்கள் தேவை குறித்து ஆய்வு செய்து தேவைப்படின் உரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும் நூலகர்களுக்கான பயிற்சி பட்டறைகள், கருத்தரங்குகள் போன்றவற்றிற்கான செலவினங்களை அவ்வப்பொழுது தேவைக்கேற்ப சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4.இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.2444/கூ.த.செ.(நிதி)/2018, நாள் 09.07.2018–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை – 2.

<u>நகல்:–</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைச் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.